மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 55/2019

**2025–ம் ஆண்டு ஜுன் மாதம் 04–ம் நாள் புதன் கிழமை** வாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம்

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சத்தியமூர்த்தி (எ) கணேசன் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : ரத்தினம் | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | :தழுதாழை | வயது | : 65/2025 |

**கூடுதல் முதல் விசாரணை :**

(i) நான் இவ்வழக்கில் வாதியாவேன். நான் என்னுடைய கூடுதல் பிரமாண வாக்குமூலத்தை எழுத்து மூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். நான் தாக்கல் செய்யும் ஆவணங்களை வாதி தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன். 01.11.2004–ம் தேதியிட்ட 3–ம் பிரதிவாதி செல்வராஜ் கிரையம் பெற்றதற்கான கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) 07.07.1980–ம் தேதியிட்டு 2–ம் பிரதிவாதி அங்கம்மாள் என்பவர் அய்யாகண்ணு மற்றும் பிச்சையம்மாய் ஆகிய நபர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகலை தாக்கல் செய்கிறேன். (அது **வா.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.) "வழக்குக்கு சம்மந்தமில்லாத ஆவணம்" என பிரதிவாதி தரப்பினரால் ஆட்சேபணைகளோடு குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.